# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,700 — 1966 ජූනි 16 වැනි බ්‍රහස්පතින්ද — 1966.6.16

14,700 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு யூன் மாதம் 16 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 123 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 129 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. | — | நானாவிதம் .. .. .. | 133 |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

எல்.டி—பீ 39/52.

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 47 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் உள்ளூராட்சி அமைச்சரால் பிறப்பிக்கப்பட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 1966 ம் ஆண்டு மே மீ 27 ந் உ.

**கட்டளை**

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள குடத்தனை கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் விஷயத்தில் கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 47 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு பொருந்தமாட்டாதெனை வெளிப்படுத்தி 1952 நவெம்பர் 14 இன் 10,469 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளை இத்தால் அழிக்கப்படுகின்றது.

6-816—16.6.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,700

---

### வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

(274 ஆம் அத்தியாயமான) வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு, உள்ளூராட்சி அமைச்சர், முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், இந்த அறிவித்தல் வாயிலாக,—

(அ) மாவனல்லைப் பட்டின சபையின் நிருவாக எல்லைகளுக்குள் தற்சமயம் அடங்கியிருக்கும் பிரதேசத்தை, மேற் கூறிய சட்டம் நடைமுறையிலிருக்கும் ஒரு பிரதேசமென வெளிப்படுத்தி ;

(ஆ) இந்த அறிவித்தல் கசெற்றில் பிரசுரமாகும் தேதியை இந்த அறிவித்தல் நடைமுறைக்கு வரும் தேதியாக நியமிக்கின்றேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
23.5.1966

6-803/1—16.6.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,700

---

### முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஆண்டு பெப்புருவரி மீ 11 ந் உ.

பெர்னட் டி சில்வா,
அரசாங்க அழுத்தகன்.

## வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

(274 ஆம் அத்தியாயமான) வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 2 ஆம்பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர், முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், இந்த அறிவித்தல் வாயிலாக,—

(அ) அளுத்னுவர கிராமச் சங்கத்தின் நிருவாக எல்லைகளுக்குள் தற்சமயம் அடங்கியிருக்கும் பிரதேசத்தை, மேற் கூறியசட்டம் நடைமுறையிலிருக்கும் ஒரு பிரதேசமென வெளிப்படுத்தி ;

(ஆ) இந்த அறிவித்தல் கசெற்றில் பிரசுரமாகும் தேதியை இந்தஅறிவித்தல் நடைமுறைக்கு வரும் தேதியாக நியமிக்கின்றேன்.

கொழும்பு,
23.5.1966.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

6–803!/2—16.6.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,700

---

ඇල්.ඩී.ඕ.39/52

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 47 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் உள்ளூராட்சி அமைச்சரால் பிறப்பிக்கப்பட்ட கட்டளை.

கொழும்பு,
1966 ம் ஆண்டு மே மீ 26 ந உ.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கட்டளை

அம்பாறை மாவட்டத்திலுள்ள கரவாகு வடக்குக் கிராமப் பிரதேசத்துக்கிராமச் சபையின் விஷயத்தில் கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 47 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு பொருந்தமாட்டாதெனெ வெளிப்படுத்தி, 1954, ஜூன் 25 இன் 10,685 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை இத்தால் அழிக்கப்படுகின்றது.

6–815—16.6.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,700

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

### 17 ம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 இன் 60 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (5) ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரப் பலத்தைக் கொண்டு, உள்ளூராட்சி உதவி அதிகாரி, வட பிரதேசம் (மேல்), யாழ்ப்பாணம், சிவசுப்பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான் இதன் அட்டவணையின் பத்தி 1 ல் குறிக்கப்பட்டுள்ள கிராமச் சபைகளின் கூட்டங்களை அந்த அட்டவணைப் பத்தி 2 ல் உள்ள எற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அந்த அட்டவணையின் பத்தி 3 ல் உள்ள எற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையின் பத்தி 4 ல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

சி. சி. மாணிக்கவாசகர்,
உள்ளூராட்சி உதவி அதிகாரி,
வட பிரதேசம் (மேல்).

உள்ளூராட்சிக் கந்தோர், யாழ்ப்பாணம்,
1966 ம் ஆண்டு ஆனி மீ 7 ந உ.

அட்டவணை

| பத்தி 1 கிராமச் சபையின் பெயர் | பத்தி 2 திகதி | பத்தி 3 நேரம் | பத்தி 4 இடம் |
|---|---|---|---|
| சுழிபுரம் .. | 23.6.66 .. | 9.30 மு.ப. .. | கிராம சபை அலுவலகம் |
| புலோலி .. | 23.6.66 .. | 11.30 மு.ப. .. | கிராம சபை அலுவலகம் |
| முகமாலை .. | 23.6.66 .. | 3.30 பி.ப. .. | கிராம சபை அலுவலகம் |

6–740—16.6.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,700

---

எல். ட. பீ./21/65.

## தம்புல்ல பட்டின சபை

### பட்டின சபைக் கட்டளைச் சட்டம்

பட்டின சபைக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 256) 152 ஆம் 156 ஆம் பிரிவுகளின் கீழ், தம்புல்ல பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக் கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழ்த் தமக்கு அளிக்கப்பட்ட தத்துவத்தைக் கொண்டு உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

நிரந்தரச் செயலாளர்.
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ஆண்டு மே மீ 29 ந உ.

(1) பின்வருவன அபாயகரமான தொழில்களெனக் கருதப்படுதல் வேண்டும் :—

அரிசி ஆலை வைத்தல்
கம்மாலை வைத்தல்
தச்சு வேலைத் தலம் வைத்தல்
ஓடு அல்லது செங்கல் இருப்பில் வைத்திருத்தல்
ஆபரணம் உற்பத்தி செய்தல்
மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்க அல்லது கழுவிச் சீர்திருத்த ஒரு நிலையம் வைத்திருத்தல்
ஒக்சிசன் மூலம் காய்ச்சி இணைக்கும் வேலை உள்ள ஏதாவது ஒரு தொழில் நடாத்துதல்
சைக்கிள் பழுதுபார்க்க ஒரு நிலையம் வைத்தல்
விற்பனைக்கு வைக்கோல் இருப்பில் வைத்திருத்தல்
மரக்காலை வைத்திருத்தல்
ஒரு நூற்றுக்கு மேற்பட வெற்றுச் சாக்கு இருப்பில் வைத்திருத்தல்
வெற்றுப் போத்தல்கள் இருப்பில் வைத்திருத்தல்
செம்பாறுங்கல், பரல்கல், கருங்கல் ஆகியன எடுக்கக் குழி தோண்டல்
தகரவேலைக் கடை வைத்திருத்தல்
முருகைக்கல் எடுப்பதற்குக் குழி வெட்டல்
காய்ச்சி இணைக்கும் வேலைத் தலம் வைத்திருத்தல்
நெல் அல்லது வேறு ஏதும் தானியம் இருப்பில் வைத்திருத்தல்
புதிய அல்லது பழைய உலோகம் இருப்பில் வைத்திருத்தல்
மிளகாய் அரைக்கும் ஆலை வைத்திருத்தல்
ஒரு அச்சுக்கூடம் வைத்தல்
விறகு இருப்பில் வைத்திருத்தல்
சீமெந்து இருப்பில் வைத்திருத்தல்.

2. பின்வருவன அருவருப்பூட்டுந் தொழில்களெனக் கருதப்படுதல் வேண்டும்.—

மொத்த விற்பனைக்கு பழுதடையத் தக்க உணவுப் பண்டங்கள் வைத்திருத்தல்
பதனிடப்பட்ட மீன் அல்லது கருவாடு இருப்பில் வைத்திருத்தல்
மீனுக்கு ஐஸ் போடுதல்
பீடி உற்பத்தி செய்தல்

3. பின்வருவன அபாயமும் அருவருப்பும் உள்ள தொழில்களெனக் கருதப்படுதல் வேண்டும்:—

ஓடு அல்லது செங்கல் உற்பத்தி செய்தல்
பட்டரிகட்கு மின் ஊட்டல்
சுண்ணாம்பு சூளை வைத்தல், பதனிடல் அல்லது இருப்பில் வைத்திருத்தல்
மண்ணெண்ணெய் இருப்பில் வைத்திருத்தல்
ஐஸ்கிறீம் உற்பத்தி செய்தல்
ரயர், ரியூப் வல்கனைட்டால் ஒட்டும் ஓர் நிலையம் வைத்திருத்தல்
இயந்திரசாதனத்தால் கருங்கல் தூளாக்கல்.

6–813—16.6.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,700

## மட்டக்களப்பு நீர்வசதி வேலைக் கட்டளைச் சட்டம்

(209 ம் அத்தியாயமான) மட்டக்களப்பு நீர்வசதி வேலைக்கட்டளைச் சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவின் கீழ் உள்ளூர் ஆட்சி அமைச்சரால் பிரசித்தஞ் செய்யப்பட்ட அறிவித்தல்.

ஈ. ஜி. குணவர்தன,
நிரந்தரக் காரியதரிசி,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ஆண்டு மே மீ 29 ந உ.

### அறிவித்தல்

இங்கே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள இடங்கள் மட்டக்களப்பு நீர்வசதி வேலைக்கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் அறவிடப்படும் 1966 ஆம் ஆண்டிற்கான நீர்வரியினின்றும் இதனால் முற்றாக விலக்கப்பட்டுள்ளன.—

### அட்டவணை

#### வட்டாரம் 6

பின்வரும் வரிமதிப்பு இலக்கங்களைக் கொண்ட இடங்கள்.—

பார் வீதி : பின்வரும் இலக்கங்கள் கொண்ட இடங்கள் தவிர்ந்த மற்றைய இடங்கள் எல்லாம்—26, 76, 76/1, 80.

பழைய வாடிவீட்டு வீதி : 21, 23, 27, 27/1, 27/2, 27/3, 31, 35, 39, 30, 32, 34, 38, 38/3, 38/4, 38/6, 38/7, 38/9, 38/15, 40, 42, 46, 46/2, 46/3, 46/5, 50.

பயனியர் வீதி : 79, 81, 87, 87/1, 87/2, 91, 91/1, 91/2.

#### வட்டாரம் 7

பெயிலி குறுக்கு வீதி : பின்வரும் இலக்கங்கள் கொண்ட இடங்கள் தவிர்ந்த மற்றைய இடங்கள் எல்லாம்—இல. 12, 16.

பார் வீதி : பின்வரும் இலக்கங்கள் கொண்ட இடங்கள் தவிர்ந்த மற்றைய இடங்கள் எல்லாம்—இல. 88, 100, 102, 112, 120, 122, 128, 128/1, 128/2, 132, 136, 136/1, 140, 142, 172, 192, 210, 212, 214, 220.

புதிய வீதி : பின்வரும் இலக்கங்கள் கொண்ட இடங்கள் தவிர்ந்த மற்றைய இடமெல்லாம் இல.—1, 3, 3/1, 3/2, 3/3, 3/4, 3/5, 20, 40, 60, 70, 74, 76, 78, 80, 86, 90, 92, பழைய இல. 1, 35, 35எ, 35/1, 37, 37/1, 37/2, 37/2எ.

வண்ணான் வீதி : இல. 36, 36/1, 50.

லேடி மனிங்டிரைவ்: இல. 135/3.

#### வட்டாரம் 8

பார் வீதி : இல. 169, 171, 171/1, 189, 189/1, 189/2, 189/3, 189/4, 195, 195/1, 197, 201, 205, 209, 215, 217, 219, 221 225, 235

எல்லை வீதி : இல. பின்வரும் இலக்கங்கள் கொண்ட இடங்கள் தவிர்ந்த மற்றைய இடமெல்லாம் இல. 6.

ஸ்டேசன் வீதி : பின்வரும் இலக்கங்கள் கொண்ட இடங்கள் தவிர்ந்த மற்றைய இடமெல்லாம் இல. 11, 21, 10, 18, 18/1, 20, 20/2, 20/3, 20/4, 20/5, 20/6.

ஸ்டேசன் குறுக்கு வீதி : பின்வரும் இலக்கங்கள் கொண்ட இடங்கள் தவிர்ந்த மற்றைய இடமெல்லாம் 1, 9, 11, 21, 23.

தாமரைக்கேணித் தெரு : பின்வரும் இலக்கங்கள் கொண்ட இடங்கள் தவிர்ந்த மற்றைய இடமெல்லாம் இல. 15, 15/10, 6, 6/1, 6/2, 6/3, 12, 16, 20, 20/2, 20/3, 20/4, 20/5, 20/7, 20/8, 20/9.

எல்லை ஒழுங்கை : சகல இடங்களும்.

தவறணை வீதி : சகல இடங்களும்.

தாமரைக்கேணி 1 ஆம் குறுக்கு வீதி : பின்வரும் இலக்கங்கள் கொண்ட இடங்கள் தவிர்ந்த மற்றைய இடமெல்லாம்—16/2, 16/4, 37, 41.

தாமரைக்கேணி குறுக்கு வீதி : சகல இடங்களும்.

சிறில் ஒழுங்கை : சகல இடங்களும்.

திருக்கோணமலை வீதி : இல. 202, 210, 214, 220, 220/1, 224, 224/1, 228, 228/2, 228/3, 232, 232/1, 238, 242, 248, 252, 258.

பத்திமாகிரி வீதி : சகல இடங்களும்.

பாரதி ஒழுங்கை : சகல இடங்களும்.

#### வட்டாரம் 9

பெயிலி குறுக்கு வீதி : பின்வரும் இலக்கங்கள் கொண்ட இடங்கள் தவிர்ந்த மற்றைய இடமெல்லாம் இல—31/4, 41, 47, 47/1, 55, 63, 63/1, 69, 73, 77.

பார் வீதி : எல்லா இடங்களும்.

பெரிய உப்போடை வீதி : சகல இடங்களும்.

உப்போடை குடா ஒழுங்கை : பின்வரும் இலக்கங்கள் கொண்ட இடங்கள் தவிர்ந்த மற்றைய இடமெல்லாம் இல. 42/2.

உப்போடை முனை பாதை : பின்வரும் இலக்கங்கள் கொண்ட இடங்கள் தவிர்ந்த மற்றை இடமெல்லாம்—இல. 1, 3, 9.

உப்போடை வீதி : இல. 9, 9/3, 9/5, 9/7, 15, 19, 29, 29/1, 29/6, 29/7, 29/13, 29/20, 39, 39/2, 45, 45/1, 8, 14, 14/1, 18, 24, 28, 34, 38, 44, 44/1, 46.

உப்போடைக்குள வீதி : இல. 2—சகல இடங்களும்.

உப்போடைக்குள வீதி : இல. 1, 51/1, 139/1, 149/1, 155, 161, 169, 169/1, 175, 175/1, பழைய இல. 81/3, 81/4, 81/5, 81/6.

சக்காரியா ஒழுங்கை : சகல இடங்களும்.

பாக்கியம் ஒழுங்கை : சகல இடங்களும்.

#### வட்டாரம் இல. 10

திருக்கோணமலை வீதி : இல. 5 இற்கும் இல. 339 இற்கும் இடையிலுள்ள பிரதேசத்துள் இருக்கும் இடங்கள் தவிர்ந்த மற்றைய இடமெல்லாம்.

ஊரணி ஒழுங்கை : சகல இடங்களும்.

எயிரான்ஸ் ஒழுங்கை : சகல இடங்களும்.

மணி ஒழுங்கை : சகல இடங்களும்.

புதிய எல்லை ஒழுங்கை : சகல இடங்களும்.

செல்வநாயகம் வீதி : சகல இடங்களும்.

#### வட்டாரம் இல. 11

எல்லை வீதி : சகல இடங்களும்.

எல்லை வீதி ஒழுங்கை—இல. 1 முதல் எல்லை வீதி ஒழுங்கை இல. 8 வரை—சகல இடங்களும்.

பாரதி ஒழுங்கை : சகல இடங்களும்.

சுடுகாட்டு வீதி : சகல இடங்களும்.

சுடுகாட்டு வீதி ஒழுங்கை இல. 1—சகல இடங்களும்.

சிறில் ஒழுங்கை : சகல இடங்களும்.

கூழாவடி ஒழுங்கை இல. 1 முதல் கூழாவடி ஒழுங்கை இல. 9—சகல இடங்களும்.

குமாரகோவில் ஒழுங்கை : சகல இடங்களும்.

கூழாவடி ஒழுங்கை : சகல இடங்களும்.

குமாரகோவில் ஒழுங்கை இல. 1—சகல இடங்களும்.

மாமாங்கப் பிள்ளையார் ஒழுங்கை : சகல இடங்களும்.

மாம்மாங்கப் பிள்ளையார் ஒழுங்கை இல. 1—சகல இடங்களும்.

புதிய எல்லை ஒழுங்கை : சகல இடங்களும்.

றெசாறியோ ஒழுங்கை : சகல இடங்களும்.

செல்வநாயகம் வீதி : சகல இடங்களும்.

திருக்கோணமலை வீதி : சகல இடங்களும்.

திருக்கோணமலை வீதி ஒழுங்கை இல. 1—சகல இடங்களும்.

திருக்கோணமலை வீதி ஒழுங்கை இல. 2—சகல இடங்களும்.

#### வட்டாரம் இல. 12

பார் வீதி : பின்வரும் இலக்கங்கள் கொண்ட இடங்கள் தவிர்ந்த மற்றைய இடமெல்லாம்—இல. 391/1, 401, 401/1, 405, 409, 409/1, 411, 411/1, 413, 415, 417, 419, 423, 425, 427, 429, 429/1, 433 433/1, 435, 437, 439, 441, 441/1, 443, 445, 445/1, 447, 447/1, 449, 451, 453, 455, 459, 461, 465, 465/1, 469, 469/1, 469/2, 473, 475, 475/1, 477, 481, 180, பழைய இல. 183.

அமிர்தகளி சுடுகாட்டு ஒழுங்கை : சகல இடங்களும்.

அமிர்தகளி 3 ஆம் குறுக்குத் தெரு : சகல இடங்களும்.

கதிராமர் வீதி : சகல இடங்களும்.

காளி கோவில் வீதி : சகல இடங்களும்.

கூழாவடி ஒழுங்கை இல. 1 முதல் கூழாவடி ஒழுங்கை இல. 12 வரை—சகல இடங்களும்.

மாமாங்கப் பிள்ளையார் வீதி : சகல இடங்களும்.

மாமாங்கம் வீதி : சகல இடங்களும்.

மாரியம்மன் கோவில் ஒழுங்கை : சகல இடங்களும்.

புதிய எல்லை வீதி : சகல இடங்களும்.

புன்னைச் சோலை வீதி : சகல இடங்களும்.

பாடசாலை வீதி : சகல இடங்களும்.

சித்திவிநாயகர் வீதி : சகல இடங்களும்.

6-814—16.6.66 ந திகதிய வர்த்தமானி இல. 14,700

ஏ.பீ.—வி. 29/62

## இறைச்சிக்காரர் கட்டளைச் சட்டம்

(272 ம் அத்தியாயமான) இறைச்சிக்காரர் கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ், இதற்குத் தகுந்த அதிகார தாபனமாகிய வதுளை மாவட்டத்திலுள்ள ஹுனுகால பட்டின சபையால் ஆக்கப்பட்டு, மேற்படி பிரிவின் கீழ்த் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் உள்ளூர் ஆட்சி அமைச்சரால் உறுதிப்படுத்தப்பட்ட ஒழுங்கு விதிகள்.

இ. ஜி. குணவர்தன,
நிரந்தரக் காரியதரிசி,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு, 16.5.1966.

### ஒழுங்கு விதிகள்

1. எவராவது, எந்தக் கொள்கலத்திலாவது, எந்த மிருகத்தையாவது

(அ) குறிக்கப்பட்ட பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய உத்தியோகத்தரால் அது பரிசோதிக்கப்பட்டு, மனித உணவிற்குத் தகுதி உள்ளதென அங்கீகரிக்கப்பட்டாலொழிய அல்லது

(ஆ) இவ் ஒழுங்கு விதியின் (அ) பந்தியின் கீழ், ஒரு மிருகம் அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து, 24 மணி நேரம் கழிந்தபின் எந்நேரத்திலாவது ;

(இ) எத்தினத்திலாவது, காலை 6 மணி முதல் காலை 11 மணி வரை உள்ள நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில், கொல்லுதலாகாது : ஆனல், இங்கே குறிக்கப்பட்ட நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில் கொல்லுவதற்குத் தலைவர் சில விசேஷ சந்தர்ப்பங்களில் அதிகாரமளிக்கலாம்.

2. 1 ஆம் ஒழுங்கு விதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்பு, ஒரு கொல்களத்தினின்றும் உயிருடன் எடுத்துச் செல்லப்பட்ட ஒரு மிருகத்தை, மறுதரம், அதே விதியின் கீழ் மனித உணவிற்கு ஏற்றதென பரிசோதித்து அங்கீகரித்தால் ஒழிய, ஒருவர் ஒரு கொல்களத்தில் கொல்லுதலாகாது.

3. (1) 1 ஆம் ஒழுங்கு விதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்பும் ஒரு மிருகம் மனித உணவிற்குக் கொல்லப்படுவதற்குத் தகுதியற்றதெனக் குறிக்கப்பட்ட பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அபிப்பிராயப்பட்டால் அம்மிருகம் கொல்லப்படுவதை அவர் தடைசெய்யலாம்.

(2) இந்த ஒழுங்கு விதியின் கீழ் கொலை செய்யப்படுவதினின்றும் விலக்கப்பட்ட ஒரு மிருகத்தை எவரேனும் கொல்லலாகாது.

4. கொல்களத்திற்கு ஒரு மிருகத்தைக் கொண்டுவரும் ஒவ்வொருவரும், அவ்விடத்தில் அம்மிருகம் இருக்கும்வரைக்கும், அதற்குப் போதிய தீனியும் தண்ணீரும் வைக்கச் சகல நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும்.

5. கொல்களத்திற்கு ஒரு மிருகத்தைக் கொண்டுவரும் ஒவ்வொருவரும், அம்மிருகம், கொலை செய்யப்படுவதற்குத் தகாததெனத் தவிர்க்கப்பட்ட சந்தர்ப்பத்தில், அதனை உடனடியாக வெளியே கொண்டு செல்லல் வேண்டும் அல்லது வெளியே கொண்டு செல்லப்பட ஒழுங்கு செய்தல் வேண்டும்.

6. (1) கொல்களத்தில் கொல்லப்பட்ட ஒரு மிருகத்தின் இறைச்சி அல்லது நிணம், குறிக்கப்பட்ட பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய உத்தியோகத்தரின் அபிப்பிராயப்படி மனித உணவிற்குத் தகாததாய் அல்லது வருத்தமுள்ளதாயிருந்தால் உடனடியாக அவ்வித இறைச்சியையோ நிணத்தையோ மனித உணவிற்கு உபயோகிக்கப்படுவதையும் விற்பனைக்கு வைக்கப்படுவதையும் தடைபண்ணி அவற்றை அழித்தல் வேண்டும் அல்லது இல்லாமற் செய்துவிடல் வேண்டும்.

(2) இவ் ஒழுங்கு விதியின் 1 ஆம் பந்தியின் கீழ், மனித உணவிற்குத் தகாததெனப் பிரகடனஞ் செய்யப்பட்ட ஒரு இறைச்சியையோ நிணத்தையோ கொல்களத்திலிருந்து, அப் பிரதேசத்தின் சுகாதார வைத்திய உத்தியோகத்தரின் உத்தரவின்றி ஒருவரும் வெளியே கொண்டு செல்லக்கூடாது.

7. 3 ஆம் ஒழுங்கு விதியின்கீழ் கொல்லப்படுதல் தடைசெய்யப்பட்ட அல்லது மனித உணவிற்குத் தகுந்ததென 1 ம் விதியின் கீழ் அங்கீகரிக்கப்படாத ஒரு மிருகம் கொல்களத்தில் கொல்லப்படுவதைக் கொல்களத்தாபகர் அங்கீகரிக்கப்படாது.

8. மனித உணவிற்கான எந்த மிருகத்தின் சடலத்தையும், அந்த மிருகத்தின் சடலத்தின் முன் தொடையிலும் பின் தொடையிலும், " ரீ. சீ. எல்." என்ற எழுத்துக்களையும், " அவுஸ்திரேலியா மாட்டிறைச்சி ", " நாட்டு மாட்டிறைச்சி ", " வெள்ளாட்டிறைச்சி ", " செம்மறியாட்டிறைச்சி ", " பன்றி இறைச்சி " என்ற அடையாளங்களில் ஏற்ற தொன்றையும் கொல்களத்தாபகர் முத்திரைச் சின்னமாக இட்டபின் அன்றி எவரேனும் ஒரு மிருகத்தின் சடலத்தை வெளியே கொண்டு செல்லக்கூடாது.

9. ஒரு மிருகம் வேறு , எந்த மிருகத்தினதும் முன்னிலையில் அல்லது கொல்களத்தில் அதற்கு முன் கொல்லப்பட்ட ஒவ்வொரு விலங்கினதும் சடலம் அப்புறப்படுத்தப்பட்டு அல்லது திரையிட்டு மறைக்கப்பட்டு அவ்விடம் சுத்தம்பண்ணப்படும்வரை கொல்லப்படலாகாது.

10. தொற்றுநோய், ஒட்டு நோய், சரும நோய் எதனுனும் பீடிக்கப்பட்டுள்ள அல்லது சமீப காலத்தில் பீடிக்கப்பட்டிருந்த எவரையும் அல்லது அத்தகைய நோயாற் பீடிக்கப்பட்டிருந்த எவருக்காவது பணிவிடை செய்த எவரையும் நோய் தொற்றுங்கால வெல்லையும், காத்தற்காலவெல்லையும், கழியும்வரை கொல்களம் எதற் குள்ளும் செல்லவோ அல்லது எதுவும் மிருகத்தைக் கொல்லுவதில் பங்குபற்றவோ ஒரு கொல்களத்தாபகர் அனுமதித்தலாகாது.

11. நியாயமான எல்லா நேரத்திலும் எந்தக் கொல்களத்துள்ளும் பிரவேசித்து அதைப் பரிசோதிக்க, உரிய பிரதேசத்தில் நியமிக்கப்பட்ட சுகாதார வைத்திய உத்தியோகத்தருக்கு சட்டப்படி அதிகாரம் உண்டு. ஒரு கொல்களத்தாபகர் இதற்கு வேண்டிய உதவிகளை உரிய வைத்திய உத்தியோகத்தருக்குச் செய்தல் வேண்டும்.

12. சபையால் தாபிக்கப்பட்ட ஒரு கொல்களத்தை உபயோகிப்பதற்கு, கீழ்க்காணும் வீதங்களில் கட்டணம் சபைக்கு, முற்கூட்டியே கொடுக்கப்படல் வேண்டும். கட்டணஞ் செலுத்தியதற்குச் சான்றான உத்தியோக பூர்வமான பற்றுச்சீட்டு ஒன்று இல்லாமல் ஒரு மிருகம் கொல்லப்படலாகாது.

கால்நடைக்கு தலைக்கு : ரூபா 2
வெள்ளாடு அல்லது செம்மறியாட்டிற்கு தலைக்கு : ரூபா 1
பன்றிக்கு தலைக்கு : ரூபா 1

13. ஒரு கொல்களத் தாபகர், சபை உத்தரவிடும் மாதிரியில் அக் கொல்களத்தில் கொல்லப்படும் ஒவ்வொரு மிருகத்தின் விவரங்களும் பதிந்து கொள்ளும் ஓர் இடாப்பு வைத்திருத்தல் வேண்டும்.

14. ஒரு பிரதேசத்திற்கு நியமிக்கப்பட்ட சுகாதார வைத்திய உத்தியோகத்தருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை, அந்த வைத்திய உத்தியோகத்தரின் உத்தரவின் பிரகாரம் கடமையாற்றும் ஒரு உத்தியோகத்தர் செயல் முறைப்படுத்தலாம்.

15. இந்த ஒழுங்கு விதிகளில்—

" மிருகம் " என்பது, ஏதாவதொரு கால்நடையை, வெள்ளாட்டை, செம்மறியாட்டை அல்லது பன்றியைக் குறிக்கும்.

" கால்நடை " யில் எருமையும் சேரும்.

" தலைவர் " என்பது சபைத் தலைவரைக்குறிக்கும்.

" சபை " என்பது, ஹுனுகல பட்டின சபையைக் குறிக்கும்.

6-810—16.6.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,700

## பதவிகள்—வெற்றிடம்

### இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

1. **படிகள்.**—வேறுவிதம் சொல்லப்பட்டாலன்றி வீட்டுவாடகைப்படி, தற்காலிக வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிக விசேட வாழ்க்கைப்படி ஆகியவை அரசாங்க விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கக் கொடுக்கப்படற்பாலன.

2. **சேவை நிபந்தனைகள்.**—உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின் (அதிகாரம் 264) ஏற்பாடுகளுக்கும், அவற்றினது திருத்தங்கள் எதனிற்கும், அவற்றின்கீழ் இயற்றப்பட்ட பிரமாணங்களுக்கும், காலத்துக்குக் காலம் அதிகாரசபையினால் விதந்துரைக்கப்படும் மற்றைய சேவை நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாய் நியமனங்கள் அமையும்.

3. **வேலைக்கமர்த்தப்படுவதற்கான நியதிகள்.**—1952 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 8 ஆம் திகதி வெளியான 10,432 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் 4 ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்ட பதவிகளும் அவற்றோடு காலத்துக்குக் காலம் சேர்க்கப்படும் பதவிகளும் உள்ளூராட்சிச் சேவையில் பெண்களல்லாதாரால் வகிக்கப்படும் பொழுது 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை இளைப்பாற்றிச் சம்பளத் திட்டப் பிரமாணங்களின்கீழ் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரியனவாகும்.

(அ) அரசாங்கத்தின்கீழ் சேவை செய்யும் உத்தியோகத்தர்கள், இளைப்பாற்றிச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 ஆம் பிரிவின்கீழ் விடுதலை செய்யப்பட்டு உள்ளூராட்சிச் சேவையின் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு மாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றிச் சம்பள உரிமைகள் பாதுகாத்துக் கொடுக்கப்படும்.

(ஆ) உள்ளூராட்சித் தாபனங்களில், அவற்றின் இளைப்பாற்றிச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும்போது கொடுக்கப்படும் இளைப்பாற்றிச் சம்பளம், 1949 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைத் (திருத்த) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1945 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவுக்கிணங்க, உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர் முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தார்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றிச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(இ) இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படும் பெண்களல்லாத ஏனையோர் யாவரும், 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படும் திகதிக்கு நேர்முந்திய திகதியில் அரசாங்க சேவையில் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளில் இருந்தவர்களும் 1952 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி வெளியான 10,329 ஆம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றிச் சம்பள நிதிப் பிரமாணங்களின்படி தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றிச் சம்பள நிதிக்குத் தங்கள் சம்பளத்தில் 4 சத விகிதத்தைச் செலுத்தவேண்டும். குறித்த உள்ளூராட்சித் தாபனம் உத்தியோகத்தரின் சம்பளத்தில் 3 சத விகிதத்தைச் செலுத்தும்:

(ஈ) நியமிக்கப்படுபவர்கள், குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு உரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறி கொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(உ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள், இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை விடயமாக முறையான தகைமைபெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(ஊ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம், பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் அல்லது அதற்கப்பால் உறுதிப்படுத்தப்படுவதற்கு உட்பட்டதாக அமையும்.

(எ) விண்ணப்பிப்பவர்கள் தங்கள் வயதுக்கத்தாட்சியாக தமது பிறப்புப் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பங்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். சத்தியக் கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா பிறப்புப் பதிவுச் சான்றிதழ்ப் பிரதிகள் சேர்த்து அனுப்பப்படாவிட்டால் விண்ணப்பிப்பவர்கள் அருகதையற்றவர்களாகக் கருதப்படுவர்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) எப்பதவிக்கேனும் நீடிய காலம் விதிக்கப்பட்டாலன்றி, காரியத்துக்கேற்ப, இளைப்பாற்றிச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றிச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்"களின் தகுதிகாண் நிலைப்/பரீட்சார்த்த காலம் இரண்டு ஆண்டுகளாயிருக்கும்.

(ii) "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்துதற்கும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச் சட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்துதற்குமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகள் எதற்கும் அமைந்தொழுகுமாறு வேண்டப்படுவர்.

(iii) (அ) இந்த உத்தியோகத்தர்கள் அவர்களின் தகுதிகாண் நிலைக்/பரீட்சார்த்த காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறுமாறு வேண்டப்படுவர்.

(ஆ) தகுதிகாண் நிலைப் பரீட்சார்த்த காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை, பிறவற்றோடு, குறிப்பிட்ட காலவரையறைக்குள் சிங்களத்தில் தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியெய்துவதைப் பொறுத்ததாயிருக்கும். குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்த தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியடையத்தவறினால் வேதனப் பெருக்கு இடைநிறுத்தப்படும். குறிப்பிட்ட காலவரையறையைக் கடந்த நீடித்த காலவரையுள் சித்தியடையத் தவறினால், வேதனப் பெருக்கின் இடைநிறுத்தம் பூரணமாகவே நிறுத்தப்பட்டதாகிவிடும் பரீட்சை சித்தியடையும் காலம்வரை இப்பூரண நிறுத்துகை செயற்படும் (13,387 இலக்கத்தையும், 9.11.62 தேதியையும் கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை உத்தியோக கரும மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமான நிபந்தனைகளைப் பார்க்கவும்).

(இ) கல்வியும் ஏனைய தகைமைகளும்

சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக்குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லா சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற சிங்களப் பரீட்சார்த்தி, சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது சமமான பரீட்சையில், சிங்கள மொழியில் அல்லது அதற்குச் சமமானதில், சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ந் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையில் உள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெற விரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

(ஈ) வினைத்திறமைகாண் தடைகள்

புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் தமது பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 2 வருடங்களுக்குள், சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தில், சிங்கள மொழியில் விதிக்கப்பட்ட வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடையவேண்டியிருக்கும். சித்தியடையத் தவறினால் உத்தியோகத்தரின் வேதனப் பெருக்கம் முதலில் இடைநிறுத்தப்படும். இரண்டாவதாக, நிறுத்தப்படும், அதன்பின் பின்போடப்படும்.

(iv) சிங்கள மொழிமூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமை பெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் சிங்களத்தில் நடக்கும் தேர்ச்சிகாண் பரீட்சையிலிருந்து தவிர்த்துவிடப்படுவர்.

(v) தகுதிகாண் நிலைக்/பரீட்சார்த்த கால முடிவில், சிங்களத்தில், விதித்த தேர்ச்சிகாண் தரத்தை எய்தமுடியாவிட்டால், உள்ளூராட்சிச் சேவை நிபந்தனைகள் 21 னதும் 22 னதும் ஏற்பாடுகள் பொருத்தமாகும்.

"(மேற்சொன்ன (iii) (அ), (ஆ) (iv) ஆகியவை, தமிழ்/ஆங்கில மொழிமூலம் சேர்க்கப்பட்டவர்களுக்கே பொருத்தமாகும்)".

குறிப்பு.—இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது 1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் எனப் பொருள்படுகின்றது.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதையும் திருப்திகரமாக நிரூபிக்கவேண்டும். உள்ளூராட்சிச் சேவைக்கு ஆட்சேர்த்தல் பற்றிய சகல தேவைகட்கும் "இலங்கையர்" என்னும் பதத்திற்கு வம்சாவழியில் அல்லது பதிவுமூலம் இலங்கைப் பிரசையாகவுள்ளவர் என்று வரைவிலக்கணம் கூறப்படுகிறது.

6. **போர்ப்படையிற் சேவை செய்த முன்னுள் வீரர்களுக்கான சலுகை:**

(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக்கூடிய வயது எல்லைக்குள் தம்மைக்கொண்டுவர உதவும் விதத்தில், தமது வயதுகளிலிருந்து, கிரமமான படையில் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவைசெய்த முன்னுள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிக்குமுரிய புதிய நியமனத்திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக்குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக்குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படை வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. **வயதுச் சலுகை.**—உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள், எவ் வயதினராயிருந்தாலும், விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு அருகதையுடையோராவர்.

8. **வேண்டற்பால ஏனையவை.**—(i) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகர சபை அதிகாரி அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள், அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பக்காரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா இல்லையா என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும் போது குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன்பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டா.

(iv) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுக்கப்படுதற்கு எவ்விதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(v) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிக்குமுன்னர் காணப்படின் விண்ணப்பதாருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும்; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவார்.

(vi) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகலவகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(vii) "கீழே இணைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்ட உள்ளூர் ஆட்சிச்சேவைஅதிகாரசபைத் தலைவருக்கு முகவரியிடப்படவேண்டும்; நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக் கூடாது."

(viii) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே வினைவைத் தேடிக்கொள்கின்றனர்.

### வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்

### உள்ளூராட்சிச் சேவை

**முக்கியமாக கவனிக்க.**—(i) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தலைவர், உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை, தபாற் பெட்டி 530, கொழும்பு 1 என்ற விலாசத்தை அடையும்வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை தலைவரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(ii) விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களைச் சித்தஞ்செய்யுமுன்னர் மேற்போந்த பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தாமா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலுக்கு உசாவி உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(iii) விண்ணப்பக்காரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும்:—(1) பிறப்புச் சான்றிதழ், (2) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (3) குணச் சான்றிதழ், (4) பதவி அத்தகைய தன்மையதாயின உயர் தொழில்/தொழில்நுட்ப தகைமைகளின் சான்றிதழ்.

(iv) விண்ணப்பக்காரர் மேற்போந்த பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

........................(........) பதவிக்கான விண்ணப்பம்.

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி : ————.

(ஆ) ........................ பதவிக்கான விண்ணப்பம்.

2. முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) : ————.

தேசிய இனம் : ————.

(மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா இலங்கையரல்லாதாரா என்பதைக் கூறுக. நீர் பதிவுமூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக).

3. தபால் விலாசம் : ————.

(விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்.)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியில் சரியான வயது : ————.

..........வருடங்கள் ........மாதங்கள்......நாட்கள்

(ஆ) பிறந்த திகதி : ————.

5. பிறந்த இடம் :

(அ) விண்ணப்பக்காரர் : ————.
(ஆ) அவரது பிதா : ————.
(இ) அவரது பிதாவழிப் பேரன் : ————.
(ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் : ————.

(விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) யையும் அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா, தனியாளரா, தாரமிழந்தவரா அல்லது கைம்பெண்ணா ? : ————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் : ————.

| பொதுக் கல்வி | | | உயர் தொழிற்/தொழில்நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1.................. | .......... | .......... | 1. .................. | .......... | .......... |
| 2.................. | .......... | .......... | 2. .................. | .......... | .......... |
| 3.................. | .......... | .......... | 3. .................. | .......... | .......... |
| 4.................. | .......... | .......... | 4. .................. | .......... | .......... |
| 5.................. | .......... | .......... | 5. .................. | .......... | .......... |

8. கல்வித் தகைமைகளும் திகதியுடன் கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையும் : ————.

(அ) சிங்களம் : ————.

(ஆ) ஆங்கிலம் : ————.

(இ) தமிழ் : ————.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில்நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக : ————.

10. கல்வி பயின்ற பாடசாலையும் அதைவிட்ட திகதியும் : ————.

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) : ————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக : ————.

(இ) உள்ளூராட்சிச சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) : ————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—

(i) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில நியமிக்கப்பட்ட திகதியும் : ————.

(ii) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் : ————.

(iii) இளைப்பாற்றிச் சம்பளமுண்டா ? : ————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப்பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் : ————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும், பேச்சை மொழி பெயர்க்கும் தேர்ச்சியுண்டா ? :————.

(அ) சிங்களம் : ————

(ஆ) தமிழ் : ————.

13 விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இவை இரண்டும் உமக்குண்டா ? உண்டேனில் அவற்றின் முழு விவரங்களையும் திகதிகளுடன் தருக) : ————.

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக : ————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? : ————.

16. வேறு ஏதும் விவரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள ஆதியன) : ————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும்). அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்ற வேண்டியதில்லை : ————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக்காணின், தெரிவுக்கு முன்னர், தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச்செம்மையின்மை கண்டுபிடிக்கப் டின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி, வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி : ————.

தலைவர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 530,
கொழும்பு 1.

# துணை விதிகள்

## முல்லேறியா பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைக் கட்டளைச் சட்டத்தின் 152 ஆம் 156 ஆம் பிரிவுகளின் கீழ் முல்லேறியா பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழ் உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்.

இ. ஜி. குணவர்தன,
நிரந்தரக் காரியதரிசி,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ஆண்டு மே மீ 29 ந் உ.

#### துணைவிதிகள்

1. இத்துணை விதிகள் முல்லேறியா பட்டின சபை விளம்பரத்துணை விதிகள்—1965 அழைக்கப்படும்.

2. எந்த விளம்பரத்தையேனும் வெளிக்காட்டுவது இத்துணைவிதிகள் கசெற்றில் பிரசுரமான திகதிக்கு முன்னர் ஆரம்பமாகியிருப்பின், அவ் விளம்பரத்திற்கு, இத்துணைவிதிகள் அத்திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குப் பொருந்தா.

3. அதன் பொருட்டுத் தலைவரால் வழங்கப்பட்ட ஒரு உத்தரவுப் பத்திரத்தின் அதிகாரத்தின் கீழன்றி, வீதி, தெரு, கால்வாய், அல்லது வரி எதிலுமிருந்து காணக்கூடியதாக விளம்பரம் எதையும் எவரும் வெளிக்காட்டுவிக்கக்கூடாது.

ஆயினும், இத்துணைவிதியின் முற்போந்த ஏற்பாடுகள், அத்தகைய விளம்பரம் தீபாலங்காரம் செய்யப்பட்ட ஒரு விளம்பரமாக அல்லது ஒரு வான் அடையாளமாக, இருந்தாலன்றி பின்வரும் விபரங்களுக்குப் பொருந்தா :—

(அ) கிடைக்கும் வரும்படி முழுவதும் ஒரு தரும நோக்கத்திற்கு உபயோகிக்கப்படவிருப்பதான களியாட்டம் எதையும் பற்றிய ஒரு விளம்பரம் ;

(ஆ) அந்த விளம்பரம் எந்த வளவில் வெளிக்காட்டப்படுகின்றதோ அங்கு நடைபெறவிருக்கும் களியாட்டம் எதையும் பற்றிய ஒரு விளம்பரம் ;

(இ) அரசாங்கத்தால் வெளிக்காட்டப்படவிருக்கும் ஒரு விளம்பரம் ;

(ஈ) சமயம், அரசியல் அல்லது பொதுக்கூட்டம் ஒன்று பற்றிய ஒரு விளம்பரம் ;

(உ) எக்கட்டிடத்தினதும் யன்னலில் உள்ள விளம்பரம் ;

(ஊ) " வாடகைக்கு " என்னும் ஒரு விளம்பரம் ;

(எ) ஒரு " விற்பனைக்கு " என்னும் ஒரு விளம்பரம் ;

(ஏ) ஒரு வீட்டிற்குரிய பெயர்த்தகடு ;

(ஐ) தொழில் நோக்கங்களுக்கு, உபயோகிக்கப்படும், ஒரு சதுர அடிப் பரப்பிற்கு மேற்படாத ஒரு பெயர்த்தகடு ;

(ஒ) வியாபார நோக்கங்களுக்கு உபயோகிக்கப்படும் ஒரு வாகனத்தில், அந்த வாகனத்தின் உடைமையாளரின் பெயரையும் விலாசத்தையும், வெளிக்காட்டி வைக்கப்படும் ஒரு விளம்பரம் ;

(ஓ) அந்த விளம்பரம் எந்த வளவில் வெளிக்காட்டப்படுகின்றதோ, அந்த வளவில் நடைபெறும் வியாபாரம் அல்லது தொழில் பற்றிய விளம்பரம்

4. (1) எந்த விளம்பரத்தையும் வெளிக்காட்டுவதற்கான ஒரு உத்தரவுப்பத்திரத்துக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், அந்த விளம்பரம் வெளிக்காட்டப்படுவதைத் தொடங்குவதற்கு எண்ணியிருக்குந் திகதியிலிருந்து ஏழு தினங்கட்கு முன்னராவது சபையால் வழங்கப்படும் பத்திரத்தில் தலைவருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஆயின், தலைவர் விசேஷ சூழ்நிலைகளில், இப்பந்தியின் முந்திய ஏற்பாடுகளில் குறித்துள்ள கால எல்லைக்குள், செய்யப்படாத அத்தகைய விண்ணப்பம் எதையும் ஏற்றுக்கொள்ளலாம்.

(2) பந்தி (1) இல் சொல்லப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும் விண்ணப்பகாரர் வெளிக்காட்ட எண்ணும் விளம்பரத்தின் ஒரு பிரதியோடும் அவ்விளம்பரம் வெளிக்காட்டப்படவிருக்கும் இடத்தைக் காட்டும் மாதிரிப்படத்தோடும் அனுப்பப்படல் வேண்டும்.

(3) பந்தி (1) இல் சொல்லப்படும் விண்ணப்பம் ஒன்றைத் தலைவர் அங்கீகரிப்பாரேல், அவர் அந்த விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்கான, அனுமதிப்பத்திரத்தின் பொருட்டு, இதற்குள்ள அட்டவணையில் குறித்துள்ள வீதப்படி கணிக்கப்படும் ஒரு கட்டணத்தைச் செலுத்துமாறு பணிப்பார். இக்கட்டணம் செலுத்தப்படும்வரை, அனுமதிப்பத்திரம் வழங்கப்படலாகாது.

5. (1) ஒரு விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்கான ஒரு அனுமதிப் பத்திரம் எவருக்கேனும் வழங்கப்படின், தலைவர், அன்னாரை—

(அ) அந்த அனுமதிப்பத்திரத்தின் இலக்கத்தையும், திகதியையும் விளம்பரப் பிரதி ஒவ்வொன்றிலும், இடுமாறு, அல்லது,

(ஆ) அந்த அனுமதிப்பத்திரத்திற்குக் கட்டணஞ்செலுத்தப்பட்டமைக்கு அடையாளமாக முத்திரை பொறித்தற்பொருட்டு, அவ்விளம்பரத்தின் ஒவ்வொரு பிரதியுங் காண்பிக்கப்பட ஏற்பாடு செய்யுமாறு பணித்தல் வேண்டும்.

(2) இத்துணைவிதியின் பந்தி (1) இன் கீழ் தலைவரிடமிருந்து ஒரு உத்தரவைப்பெற்ற ஒவ்வொருவரும் அவ்வுத்தரவின்படி செயலாற்றல் வேண்டும்.

6. எவரேனும்—

(அ) அவ்விளம்பரம் சபையின் வேலைப் பரிபாலகரால் அங்கீகரிக்கப்பட்ட முறையில் கட்டி எழுப்பப்பட்ட ஒரு முன்னீண்ட விளம்பரமாயிருந்தாலன்றி, கட்டிட ரேகையிலிருந்து இடைநிலையிலாக்கும் பொழுது வீதி அல்லது தெரு எதன்மீதும் 6 அங்குலத்திற்கதிகமான தூரத்திற்கு நீண்டுகொண்டிருக்கக்கூடிய முறையில் விளம்பரமொன்றை வெளிக்காட்டுவிக்கவோ ;

(ஆ) ஒரு விளம்பரம், தெருவின் மத்தியிலிருந்து ஆகக்குறைந்தது 25 அடிக்குக் குறையாத தூரத்தில் இருந்தாலன்றி, அவ்விளம்பரத்தைக் கட்டிட ரேகை ஒன்று இல்லாத எந்த இடத்திலும் வெளிக்காட்டுவிக்கவோ ;

(இ) ஒரு விளம்பரத்தை நிலத்திலிருந்து 25 அடிக்கு அதிகமான உயரத்திலேனும், வீதி அல்லது தெரு எதன் மீதும் நீண்டு கொண்டேனும் இருக்கும் விளம்பரப்பலகைமீது வெளிக்காட்டுவிக்கவோ ;

(ஈ) ஒரு வீதியில் அல்லது தெருவில் மருவிக்கொண்டிருக்கும் ஒரு கட்டிட முகப்பில், அத்தகைய முகப்பின் எல்லைகளுக்கப்பால் நீளும் அல்லது எந்த இடத்திலேனும் நடைபாதையிலிருந்து அல்லது நிலத்தின் சராசரி, மட்டத்திலிருந்து அவ்வடையாளத்தின் அடி எவ்வளவு தூரத்திலிருக்கின்றதோ, அதில் நாலில் ஒன்றிற்கு அதிகமான உயரம் உள்ள கடை அடையாளம், எதையும் மாட்டுவிக்கவோ அல்லது தொங்கவிடுவிக்கவோ ; அல்லது,

(உ) சபையின் வேலைப் பரிபாலகரால் அங்கீகரிக்கப்படாத முறையில் வான் அடையாளம் எதையும் கட்டி எழுப்புவிக்கவோ கூடாது.

7. பொது வழிபாட்டிடம், பொதுப் பூங்கா, அல்லது மலசலகூடம் எதிலேனும் அல்லது பாலம், தெருவிளக்குக் கம்பம், அல்லது தந்தி அல்லது தொலை பேசிக்கம்பம், அல்லது மின்சாரக் கம்பம் எதிலேனும் விளம்பரம் எதையும் எவரேனும் வெளிக்காட்டு வித்தலாகாது.

(8) (1) விளம்பரம் எதுவும் தலைவரின் அபிப்பிராயப்படி விகாரமான அல்லது ஆட்சேபிக்கத்தக்க - நிலைமையிலிருக்குமாயின், அவர் எழுத்து மூலமான அறிவித்தல் வாயிலாக, அந்த அறிவித்தலில் குறிக்கப்படும் காலத்திற்குள், அந்த விளம்பரத்தை வெளிக்காட்டுவதை நிறுத்தும்படி அவ்விதம் வெளிக்காட்டுவிப்பவருக்குக் கட்டளையிடலாம்.

(2) தலைவரிடமிருந்து (1) ஆம் பந்தியின் கீழ் ஒரு அறிவித்தலைப் பெற்றுக் கொள்ளும் ஒருவர், அந்த அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள காலத்திற்குள், அவ்வறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

9. விளம்பரங்களை வெளிக்காட்டுவதற்கு உபயோகிக்கப்படும் விளம்பரப் பலகை எதனதும் சொந்தக்காரர் அல்லது குத்தகைக்காரர்—

(1) அந்த விளம்பரப் பலகையைப் பழுதற்றதும், பாதுகாப்பானதுமான நிலையில் பேணவும் ;

(2) அந்த விளம்பரப் பலகையின் முன்புறத்தில் ஒரு துலக்கமான இடத்தில், அவரது பெயரையும், முகவரியையும் தெளிவானதும் விளக்கமானதுமான எழுத்துகளில் காட்டவும் வேண்டும்.

10. எந்த விளம்பரத்திலும், அந்த விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்கான உத்தரவுப்பத்திரக் கட்டணம் செலுத்தப்பட்டமைக்கு அடையாளமாகத் தலைவரால் இடப்பட்டுள்ள அடையாளம் குறி, எழுத்து, வார்த்தை, அல்லது எண் எதையும் எவரும் உருவழிக்கவோ உருவழிப்பிக்கவோகூடாது.

11. எவரேனும்—

(அ) எவ்விளம்பரத்தையும் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட முறையிலல்லது மாதிரியில், அன்றி ஒருவாகனத்தில் வெளிக்காட்டுவிக்கலாகாது ; அல்லது

(ஆ) பொலிசு அத்தியட்சரால், அங்கீகரிக்கப்பட்ட ஒரு வெளிச்ச விளம்பரமல்லாத வெளிச்சவிளம்பரம் எதையும் தாங்கிய வாகனமெதையும், வீதி அல்லது தெரு எதிலும் ஓட்டுவித்தலாகாது.

12. இந்தத்துணை விதிகளின் ஏற்பாடுகள் எதையும், மீறி நடக்கும் எவரேனும் ஒரு குற்றம் புரிந்தவராகி குற்றத் தீர்ப்பளிக்கப்படும்போது 50 ரூபாவிற்கு மேற்படாததெண்டத்திற்கும் மீறுகை நீடிக்கும் பட்சத்தில குற்றத்தீர்ப்பிற்குப் பின், அல்லது அந்த நீடிக்கும் மீறுகையைக் கவனத்திற்குக் கொண்டுவந்து தலைவரால் எழுத்து மூலமான ஒரு அறிவித்தல் வழங்கப்பட்டபின், மீறுகை நீடிக்கும் ஒவ்வொரு தினத்திற்கும், 25 ரூபாய்க்கு மேற்படாத தெண்டத்துக்கும் பாத்திரராவார்.

13. இத்துணை விதிகளில் சந்தர்ப்பம் வேறுவிதம் வேண்டினாலன்றி "விளம்பரம்" என்பது, காணி, கட்டிடம், அல்லது அமைப்பு எதற்கும் மேலே உள்ள அல்லது எதன் மீதும் தங்கியுள்ள விளம்பர நோக்கமாக, முற்றாகவோ பகுதியாகவோ உபயோகிக்கப்படும் அல்லது விளம்பரப் பாங்குள்ள வார்த்தை, எழுத்து, எண், அடையாளம் சுவரொட்டி, பலகை, அறிவித்தல், மாதிரி, அல்லது பிரதிமை எதையும் உட்படுத்தும்.

"தலைவர்" என்பது சபைத்தலைவரைக் குறிக்கும்.

"சபை" என்பது முல்லேறியா பட்டின சபையைக் கருதுகிறது.

"விளம்பரப்பலகை" என்பது, விளம்பரம் எதையும் வெளிக்காட்டும் பொருட்டு நிறுத்தப்பட்டுள்ள, அல்லது உபயோகிக்கப்படும் அமைப்பு, ஆதாரம், கம்பம், பலகை, சுவரொட்டி எதையும் அல்லது வேறு அமைப்பு எதையும் கருதும்.

"வான் அடையாளம்" என்பது, வீதி, தெரு, கால்வாய் அல்லது ஏரி எதிலுமுள்ள ஏதாவதொரு இடத்திலிருந்து ஆகாயத்தைப் பின்னணியாகக் கொண்டு, முற்றாகவோ பாகமாகவோ பார்க்கக்கூடிய, காணி, கட்டிடம், அல்லது வேறு அமைப்பு, அல்லது வேறு ஆதாரம் எதிலும் பொருத்தப்பட்டதும், அல்லது எதிலும் இணைக்கப்பட்டதும், விளம்பர நோக்கத்திற்கு உபயோகப்படும், வார்த்தை எழுத்து, மாதிரி, அடையாளம் அல்லது பிரதிமை எதையும் குறிப்பதோடு, காணி, கட்டிடம், அமைப்பு, வீதி, எதிலும், எதன் மேலேயும் விளம்பரநோக்கமாக, முற்றாகவேனும் பகுதியாகவேனும் உபயோகிக்கப்படும் வாயுக்கூண்டு, பாரக்குடை, இழுவண்டி அல்லது இதனையொத்த வேறு உபாயம் எதையும் உட்படுத்தும்.

## அட்டவணை

### உத்தரவுப்பத்திரங்களின் கட்டண விகிதங்கள்

| விளம்பரத்தின் விவரணம் | உத்தரவுப்பத்திரக்கட்டணம் ரூ. ச |
|---|---|
| பேர்மிட் தேவைப்படும் காலம்— | |
| (அ) இரண்டு வாரங்கட்கு மேற்படாவிடின் ஒவ்வொரு சதுர அடிக்கும் .. .. .. | 0 25 |
| (ஆ) இரண்டு வாரங்கட்கு மேற்பட்டும் 1 மாத காலத்திற்குட்பட்டிருப்பின்— ஒவ்வொரு சதுர அடிக்கும் .. .. | 0 50 |
| (இ) ஒரு மாத காலத்திற்கு மேற்பட்டும் 1 வருட காலத்திற்குட்பட்டிருப்பின்— ஒவ்வொரு சதுர அடிக்கும் .. .. | 1 0 |
| (ஈ) ஒரு வருடத்திற்கு மேற்பட்டிருப்பின் ஒவ்வொரு வருடத்திற்கும், அல்லது வருடத்தின் ஒரு பகுதிக்கு .. | 1 0 |

6–805—16.6.66 ந திகதிய வர்த்தமானி இல. 14,700.

---

## பட்டின சபைக் கட்டளைச் சட்டம்

பட்டின சபைக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 256) 152 ஆம், 156 ஆம் பிரிவுகளின் கீழ், வரக்கப்பளைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழ்த் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்.

நிரந்தரச் செயலாளர்,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு, 1966 ம் ஆண்டு மே மீ 29 ந உ.

### துணைவிதிகள்

மலசல கூட வேலைக் கட்டணம்

1. இப்பட்டின சபையால் செயல்முறைப்படுத்தப்பட்டுவரும் நியமத் துணைவிதிகளின் XIX ஆம் பகுதியிலடங்கிய 6 ஆம் துணைவிதியின் அலுவல்கட்கு, சபைக்கு மாதம் மாதம் கட்டப்பட வேண்டிய மலசலகூட வேலைக் கட்டணம், எடுக்கப்படும் வாளி ஒன்றிற்கு 1 ரூபா என்ற விகிதப்படி ஆகும்.

2. கட்டணங் கட்டப்பட வேண்டிய மாதத்தை அடுத்து வரும் மாதத்தின் 5 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் குறிக்கப்பட்ட கட்டணம் சபைக்குக் கொடுக்கப்படல் வேண்டும்.

6–807—16.6.66 ந திகதிய வர்த்தமானி இல. 14,700

## கிராமச் சபைகள் சட்டம்

1961 இன் 60 ம் இலகக சட்டத்தால் திருத்தப்பட்ட படியான (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச்சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் வவுனியா மாவட்டத்து சின்னச்செட்டிகுளம் மேற்கு கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையால் ஆக்கப்பட்டு, அப் பிரிவின் (3) ம் உட் பிரிவால் உள்ளூராட்சி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு அவரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1966 ம் ஆண் மே மீ 16 ந் உ.

### உபவிதிகள்

### உத்தியோகத்தர்கள்

1. சபைக்கு வருமதியான எல்லா வரிகளையும் கட்டணங்களையும் சேகரிப்பதற்கும் தமது கையொப்பத்தின் பிரதிலிபியையும் சபை முத்திரையையும் கொண்ட பற்றுச்சீட்டுக்களை வழங்குவதற்கும் உத்தியோகத்தர் அல்லது பிறர் எவருக்கும் தலைவர் எழுத்தில் அதிகாரமளிக்கலாம்.

2. ஒருவரும் வேண்டுமென்று—

(அ) அக்கிராசனரையாவது அல்லது சபையின் வேறு உத்தியோகத்தர் எவரையுமாவது கிராமச்சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன் கீழ் உண்டாக்கப்பட்ட உபவிதிகள் எதனுனுமல்லது எதன்கீழும் அந்த தலைவருக்கு அல்லது உத்தியோகத்தருக்கு கொடுக்கப்பட்ட, விதிக்கப்பட்ட அல்லது குறிக்கப்பட்ட தத்துவம், கடமை அல்லது அலுவல் எதையும் பிரயோகிக்க, நிறைவேற்ற அல்லது செய்யவிடாது தடுக்கலாகாது, அல்லது

(ஆ) சபையால் அல்லது சபைக்காக வேலைக்கு அமர்த்தப்பட்ட உத்தியோகத்தர் அல்லது ஊழியன் எவரையும், தலைவரால் அல்லது சபையின் வேறு உத்தியோகத்தர் எவராலும் அவருக்கு இடப்பட்ட சட்டமுறையான கடமை எதையும் செய்யவிடாது தடுக்கலாகாது.

### பாற்பட்டிகளும் பால் வியாபாரமும்

3. (1) அதற்கென தலைவரால் வழங்கப்பட்ட ஒரு உத்தரவுப்பத்திரம் வைத்திருந்தாலன்றி ஒருவரும் இரண்டு அல்லது அதற்கதிகமான பசுக்கள் உள்ள ஒரு பாற்பட்டி வைத்திருக்கலாகாது.

(2) 1 ம் பந்தியின் படி வழங்கப்படும் உத்தரவுபத்திரம் ஒவ்வொன்றுக்குமான கட்டணம் இதன் அட்டவணையில் சொல்லப்படும் வீதங்களின் படி கணிக்கப்படும்.

4. ஒரு பசுவின் பாலை விற்க விரும்பும் அல்லது விற்பனைக்கு விடும் ஒவ்வொருவரும் சபையின் புத்தகங்களில் தம்மை ஒரு பதியப்பெற்ற பால் வியாபாரியாகப் பதியச் செய்து அதன் பொருட்டு தலைவரிடமிருந்து ஒரு அனுமதிச்சீட்டு பெற்றுக்கொள்ளவேண்டும்.

5. தண்ணீர் அல்லது வேறு ஏதும் பிறபொருள் அல்லது திராவகம் கலந்த பாலை ஒருவரும் கிராமப் பகுதிக்குள் விற்கவோ, கொண்டு திரிந்து வியாபாரம் செய்யவோ கொடுக்கவோ காட்டவோ, கொண்டு செல்லவோ அல்லது விற்பனைக்கு விடவோ கூடாது.

6. ஒருபாற்பட்டியின் உத்தரவுப்பத்திரக்காரராக அல்லது பதிவு செய்யப்பட்ட ஒரு பால் வியாபாரியாக அல்லது அத்தகைய உத்தரவுப் பத்திரகாரரின் அல்லது பதிவுசெய்யப்பட வியாபாரியின் அதிகாரம் பெற்ற பிரதிகாரனக இருந்தாலன்றி ஒருவரும் கிராமப்பகுதிக்குள் எச்சமையத்திலேனும் எதும் பாலை விற்கவோ அல்லது காட்டவோ, வைத்திருக்கவோ கொண்டுதிரிந்து வியாபாரம் செய்யவோ, கொண்டுசெல்லவோ அல்லது விற்பனைக்குவிடவோ கூடாது.

7. ஒவ்வொரு லைசென்ஸ்காரரும், பதிவுசெய்யப்பட்ட வியாபாரியும் அல்லது அதிகாரம்பெற்ற விற்பனையாளரும் விற்பதற்காக பாலைக் கொண்டு செல்லுகையில், கொடுக்கையில், கொண்டுதிரிந்து கூவுகையில் அல்லது காட்டுகையில், விசயத்திற்கேற்ப, தமது உத்தரவுப்பத்திரத்தை அனுமதிச்சீட்டை அல்லது எழுத்துமூலமான அதிகாரப்பத்திரத்தை தம்முடன் வைத்திருக்கவேண்டும். சுகாதாரப் பரிசோதகர் எவரேனும் அல்லது அதற்கென தலைவரால் எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பெற்ற வேறு எவரேனும் கேட்கும்போது அந்த உத்தரவுப் பத்திரத்தை, அனுமதிச்சீட்டை அல்லது எழுத்துமூலமான அதிகாரப்பத்திரத்தை பார்ப்பதற்குக் கொடுக்கவேண்டும்.

8. ஒரு பாற்பட்டியின் லைசென்ஸ்காரர், எல்லா சாணத்தையும், குப்பையையும், மூத்திரத்தையும், அல்லது கழிவிவரும் கழிவுகளையும் தினமும் ஒருதடவையாவது பாற்பட்டியில் இருந்து அகற்றுவித்து தொல்லை உண்டுபண்ணுதமுறையில் அதை ஒழிப்பிக்கவேண்டும்.

9. ஒரு பாற்பட்டியின் லைசென்ஸ்காரர் பாற்பட்டியின் ஒவ்வொரு பகுதியையும் அதன் சுற்றுப்புறங்களையும் சுத்தமாகவும் சுகாதார நிலைமையிலும் வைத்திருத்தல் வேண்டும்.

10. ஒரு பாற்பட்டியின் உத்தரவுப்பத்திரக்காரர், கண்ணுடியினுல், கோப்பையினுல், மினுக்கப்பெற்ற மண்பாண்டத்தினுல், தகரத்தினுல் அல்லது எனமல் பூசிய அல்லது நாகம் பூசிய இரும்பினுல் ஆக்கப்பெற்ற பாத்திரமல்லாத வேறு பாத்திரம் எதிலும் பாலை ஊற்றிவைக்கச் செய்யவோ அல்லது விடவோ கூடாது.

11. எதும் தொற்று நோய், ஒட்டு நோய் அல்லது சருமநோய் பீடித்த அல்லது அத்தகைய நோய் பீடித்த எவருக்கும் சமீபகாலத்தில் பணிவிடை செய்த எவரும் நோய்தொற்றும்கால எல்லையும் காத்தற்கால எல்லையும் கழியும்வரை ஒரு பாற்பட்டிக்குள் செல்லவோ அல்லது பாலை தயாரிக்கவோ விற்பதில் அல்லது கொண்டுசெல்வதில் பங்கு பற்றவோகூடாது.

12. ஒரு பாற்பட்டியின் உத்தரவுப்பத்திரக்காரர் அல்லது பதிவுசெய்யப்பட்ட வியாபாரி அலைந்துதிரியும் பசு எதிலும் அல்லது எதும் நோயுள்ள பசு எதிலும், மனித உபயோகத்தின் பொருட்டுப் பால் கறக்கலாகாது.

13. ஏதேனும் வகையான மாட்டுநோய் ஏற்பட்டிருக்கும் எப்பகுதியிலும், 3 ம் உப விதியின்படி வழங்கிய உத்தரவுப்பத்திரம் எதையும் அல்லது 4 ம் உப விதியின்படி வழங்கிய அனுமதிச்சீட்டு ஒன்றை அவசியமான காலத்துக்கு நிறுத்திவைத்தல் தலைவருக்கு நியாயமுறையாகும்.

14. தலைவர் சுகாதாரப் பரிசோதகர் அல்லது அக்கிராசனரால் அதற்கெனமுறைப்படி அதிகாரமளிக்கப்பெற்ற எவரும் எச்சமையத்திலேனும் அல்லது கிராமப்பகுதிக்குள் எவ்விடத்திலேனும் எப்பாற்பட்டியினதும் பாலை அல்லது விற்பதற்கு விட்ட அல்லது கொண்டு சென்ற பாலைப் பரிசோதிக்கலாம்.

15. இந்த உபவிதிகளின் படி வழங்கிய உத்தரவுப்பத்திரம் அல்லது அனுமதிச் சீட்டு ஒவ்வொன்றும் அந்த உத்தரவுப் பத்திரம் அல்லது அனுமதிச் சீட்டு எந்த வருடத்திற்கு வழங்கப்பட்டதோ அவ்வருடத்து டிசம்பர் மாதம் முப்பத்தொராம் திகதியன்று வலியற்று முடிவுறும்.

### குடியிருக்கும் வளவுகள்

16. கிராமப்பகுதிக்குள் உள்ள எந்த வீட்டிலும் குடியிருப்பவர் அல்லது அங்கு எவரும் குடியிருக்காவிட்டால் அதன் சொந்தக்காரர் அவ்வீட்டைச் சேர்ந்த காணியைத் துப்பரவாகவும் சுகாதார நிலைமையிலும் புல் பூண்டுகளும் குப்பையும் இல்லாமலும் வைத்திருத்தல் வேண்டும்.

### வீடுகளைச் சுத்தம் செய்தல்

17. எந்த வீடும் அதில் வசிப்பவர்களின் அல்லது அயலவர்களின் சுகத்திற்குக்கேடு விளைவிக்கத்தக்க சுகாதாரமற்ற நிலையில் அல்லது பழுது பார்க்கப்படவேண்டிய நிலையில் இருப்பதாகத் தோன்றும்போது, தலைவர் அவ்வீட்டின் சொந்தக்காரருக்கு ஒரு அறிவித்தல் கொடுக்கச் செய்து அந்த அறிவித்தலில் சொல்லப்பட்ட காலத்துக்குள் சொந்தக்காரர் செய்யவேண்டியகாரியம் இன்னது என்பதைத் தெரியப்படுத்த வேண்டும்.

18. (1) உப விதி 17 ன் படி ஒரு அறிவித்தல் கொடுக்கப்பெற்ற வீட்டுச் சொந்தக்காரர் ஒவ்வொருவரும் அந்த அறிவித்தலின் தேவைகளை அதில் சொல்லப்படும் காலத்துக்குள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(2) உப விதி 17 ன் படியான ஒரு அறிவித்தலின் தேவைகளைப் பூர்த்திசெய்யத்தவறும் அல்லது மறுக்கும் பட்சத்தில் தலைவர் அவ்வேலையைச் செய்விக்கலாம். அதனுல் நேரும் செலவுகள் சபைக்கு வருமதியான ஒருகடனைப்போல் வீட்டுச்சொந்தக்காரரிடமிருந்து அறவிடப்படலாம்.

19. (1) கூட்டம் கூடும் அல்லது வழிபாட்டுக்குரிய இடம் எதனனும் சொந்தக்காரர் அல்லது அதில் குடியிருப்பவர் அல்லது அதன் பராமரிப்பாளர் அந்தஇடத்தைப் போதிய காற்றோட்டத்துடனும் சுத்தமாகவும் சுகாதார நிலைமையிலும் வைத்திருத்தல் வேண்டும்.

(2) தலைவர், அங்ஙனம் செய்வதசியமாகும் போதெல்லாம், கூட்டம் கூடும் அல்லதுபிரார்த்தனைக்குரிய இடம் எதனனும் சொந்தக்காரருக்கு அல்லது அதில் குடியிருப்பவருக்கு அல்லது அதன் பராமரிப்பாளருக்கு எழுத்துமூலமான அறிவித்தல் கொடுத்து அந்த அறிவித்தலில் சொல்லப்படும் காலத்துக்குள் கூட்டம் கூடும் அல்லது பிரார்த்தனைக்குரிய அந்த இடத்தைச் சுத்தம் செய்யும்படி அல்லது அதற்கு வெள்ளை அடிக்கும்படி அந்தச் சொந்தக்காரருக்கு, குடியிருப்பவருக்கு அல்லது பராமரிப்பாளருக்குக் கட்டளையிடலாம்.

(3) (2) ம் பந்தியின்படி ஒரு அறிவித்தல் வழங்கப்பெற்ற ஒவ்வொருவரும் அந்த அறிவித்தலின் தேவைகளை அதில் சொல்லப்படும் காலத்துக்குள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(4) (2) ம் பந்தியின் படியான ஒரு அறிவித்தலின் தேவைகளைப் பூர்த்திசெய்ய எவரேனும் தவறும் அல்லது மறுக்கும் பட்சத்தில் தலைவர் அவ்வேலையைச் செய்வித்து அதனால் நேரும் செலவுகளைச் சபைக்கு வருமதியான ஒரு கடனைப்போல அவரிடமிருந்து அறவிடலாம்.

20. எக்காணியினதும் சொந்தக்காரர் அல்லது அதில் குடியிருப்பவர் தமது காணியைக் குப்பையும் கஞ்சலும் இல்லாமல் வைத்திருக்கவும் அத்தகைய குப்பையை அல்லது கஞ்சலை ஈக்கள் உற்பத்தியாகாமல் அல்லது ஏதும்தொல்லை நேராமல் தடுக்கக்கூடியதாக எரிப்பிக்கவும் அல்லது புதைப்பிக்கவும் அல்லது வேறு வகையில் ஒழிப்பிக்கவும் வேண்டும்.

### எல்லைகளும் வேலிகளும்

21. பயிர் செய்யப்படாத காணி ஒவ்வொன்றினதும் சொந்தக்காரர், குத்தகைக்காரர், குடியிருப்பவர் அல்லது அதற்குப் பொறுப்பாளியாக இருப்பவர், கதிகால் வேலிகளால் அல்லது அகளிகளால் அல்லது நிலத்தில் உறுதியாகப் பதிக்கப்பட்ட கற்களால் அல்லது கிராமப் பகுதியின் வழக்கத்துக்கு இணக்கமான வேறு ஏதும் வகையில் எல்லைகளைக் குறித்தல் வேண்டும்.

22. பயிர் செய்யப்படும் காணி ஒவ்வொன்றினதும் சொந்தக்காரர் குத்தகைகாரர், குடியிருப்பவர் அல்லது அதற்குப் பொறுப்பாளியாக இருப்பவர் அக்காணியின் எல்லை நெடுக ஒரு வேலி போட்டு அந்த வேலியை நன்னிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

23. அணித்தாக இருக்கும் இரண்டுகாணிகளின் விடயத்தில், பொது எல்லையாக அமையும் அடையாளம், அகழி அல்லது வேலி எதையும் விதிப்பதற்கும், உண்டுபண்ணுவதற்கும் அல்லது போடுவதற்கும் அவற்றை நன்னிலையில் வைத்துப் பரிபாலிப்பதற்கும் அக் காணிகளின் சொந்தக்காரர்கள், குத்தகைக்காரர்கள், குடியிருப்பவர்கள் அல்லது அவற்றிற்குப் பொறுப்பாளியாகவிருப்பவர்கள் கூட்டாகப் பொறுப்பாளிகளாவர் : ஆயின் அவ்விரு காணிகளில் ஏதாவது ஒன்றின் சொந்தக்காரர், குத்தகைக்காரர், குடியிருப்பவர் அல்லது அதற்குப் பொறுப்பாளியாக இருப்பவர் மற்றக் காணியிலுள்ள மரங்களுக்கு அல்லது செடிகளுக்கு சேதம் உண்டாகாமல் தடுப்பதற்கு வேண்டிய சகலமான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளுடன் தமது சொந்தச் செலவில் பொது எல்லையில் வேலி போடுதல் சட்டமுறையாகும்.

24. தமது சொந்தச் சேலவில் ஒரு எல்லை வேலியைப் போடும் எவரும் வேலிக்கதிகாலின் பிரயோசனத்தை அனுபவிக்கும் உருமையுடையவராவார். மேலும் அவருடைய சம்மதமின்றி அத்கைய வேலிக் கதிகால் எதிலுமிருந்து ஒருவரும் இலைகளைப் பறிக்கவோ அல்லது கிளைகளை வெட்டவோ கூடாது.

25. எக்காணியிலும், வேலி, அகழி அல்லது எல்லையடையாளம் எதையும் உண்டுபண்ணும் அல்லது திருத்தும் நோக்கமாக அவசியமான பொருட்களுடனும் ஆயுதங்களுடனும் அணித்தாக இருக்கும் காணிகள் எதற்குள்ளும் பிரவேசித்தல், அக்காணியின் சொந்தக்காரருக்கு குத்தகைக்காரருக்கு குடியிருப்பவருக்கு அல்லது அதற்குப் பொறுப்பாளியாக இருப்பவருக்கு அல்லது அவரின் வேலையாட்களுக்குச் சட்டமுறையாகும்.

26. ஒருவரும் வேலி அல்லது எல்லை எதையும் வேண்டுமென்று மாற்றவோ அல்லது அழிக்கவோ அல்லது சேதப்படுத்தக்கூடிய காரியம் எதையும் செய்யவோ அல்லது எக்காணியிலுமிருந்து காணி அடையாளம் எதையும் அகற்றவோ கூடாது.

### அலைந்து திரியும் மாடுகள்

27. கிராமப் பகுதிக்குள் உள்ள பொதுத் தெரு அல்லது பாதை அல்லது இடம் எதிலும் அலைந்து, திரியும் மாடுகள், செம்மறியாடுகள் வெள்ளாடுகள் யாவும் பிடிக்கப்பட்டதும் சபையால் அந்நோக்கத்துக்கு ஸ்தாபிக்கப்பட்ட தொழுவத்தில் வைக்கப்படும்.

28. அவ்விதம் தொழுவத்தில் விடப்பட்ட விலங்கு எதையும் மீட்பதற்கு முன்னர் செலுத்தவேண்டிய செலவு தொகை பின்வரும் விகிதங்களின்படி கணிக்கப்பட வேண்டும் :—

வைத்திருப்பதற்கு, ஒன்றுக்கு ஒரு நாளைக்கு அல்லது ஒரு நாளின் பகுதிக்கு ரூபா 1/-,

தீனுக்கு (கொடுக்கப்பட்டால்), ஒன்றுக்கு ஒரு நாளைக்கு அல்லது ஒரு நாளின் பகுதிக்கு 75 சதம்.

### சுகத்துக்கேற்காத ஆகாரமும் பானமும்

29. சுகத்திற்கேற்காத அல்லது மனித உபயோகத்துக்குத் தகுதியற்ற ஆகார அல்லது பானபதார்த்தம் எதையும். ஒருவரும் விற்பனைக்கு வைக்கவோ அல்லது வெளியே காட்டவோ கூடாது.

30. விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் அல்லது வெளியே காட்டப்பட்டிருக்கும் ஆகார பான பதார்த்தமெதுவும் சுகத்திற்கேற்காததாக அல்லது மனித உபயோகத்துக்குத் தகுதியற்றதாகக் காணப்பட்டால் அப்பதார்த்தத்தைக் கைப்பற்றுதல், தலைவருக்கு அல்லது வைத்திய சுகாதார உத்தியோகத்தருக்கு அல்லது சுகாதார பரிசோதருக்கு அல்லது அக்கிராசனரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பெற்ற எவருக்கும் நியாய முறையாகும்.

31. வைத்திய சுகாதார அதிகாரியல்லாத வேறு உத்தியோகத்தர் அல்லது ஆள் எவரும் ஆகார அல்லது பானபதார்த்தமொன்றைக் கைப்பற்றுமிடத்து அவர் கைப்பற்றிய பதார்த்தத்தின் மாதிரியை யாரிடமிருந்து அப்பதார்த்தம் கைப்பற்றப்பட்டதோ அவர் முன்னிலையில் ஒரு கொள்கலத்திலிட்டு அந்தமாதிரியைக்கூடிய்வரை கெதியாக வைத்திய சுகாதார உத்தியோகத்தரிடம் அல்லது வேறு அரசாங்க வைத்திய உத்தியோகத்தரிடம் காட்டவேண்டும்.

32. ஆகார அல்லது பான பதார்த்தமொன்று கைப்பற்றப்படுமிடத்து அப்பதார்த்தத்தைக் கைப்பற்றுவர், அப்பதார்த்தம் யாரிடமிருந்து கைப்பற்றப்படுகிறதோ அவர் " சீல் " வைத்தமாதிரியைக் கேட்கும்பொழுது கைப்பற்றிய பதார்த்தத்தின் மாதிரியை ஒரு கொள்கலத்திலிட்டு அப்பதார்த்தம் யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அவர் முன்னிலையில் மூடி " சீல் " வைத்து அந்த மாதிரியை அவரிடம் கொடுக்கவேண்டும்.

33. ஆகார அல்லது பான பதார்த்தமொன்றைக் கைப்பற்றிய வைத்திய சுகாதார அதிகாரி அல்லது ஆகார அல்லது பான பதார்த்தமொன்று கொண்டுவந்து காண்பிக்கப்பெற்ற வைத்திய அதிகாரி அப்பதார்த்தம் சுகத்திற் கேற்காதது அல்லது மனித உபயோகத்திற்குக் தகுதியற்றதென்று அத்தாட்சிப்பண்ணினால் அக்கிராசனர் அப்பதார்த்தத்தை அழித்துவிடும்படி அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டாமல் அல்லது மனித உபயோகத்துக்கு பாவிக்காமல் தடுத்தற்கேற்றவாறு அகற்றும்படி செய்வித்தல்வேண்டும். அந்த ஆகார அல்லது பான பதார்த்தம் சுகத்திற்கேற்றதென்றும் மனித உபயோகத்துக்குத் தகுதியானதென்றும் வைத்திய உத்தியோகஸ்தர் அத்தாட்சிப் பண்ணினால் அப்பார்த்தம் அதன் சொந்தக்காரரிடம் திருப்பிக்கொடுக்கப்பட வேண்டும்.

34. இயற்கையான காரணங்களினாலாவது அல்லது ஏதாவது நோயினாலாவது அல்லது நீரில் மூழ்கியாவது இறந்த அல்லது ஒரு காட்டு மிருகத்தினால் கொல்லப்பட்ட அல்லது பாம்பு அல்லது வெறிநாய் கடித்துச் செத்த எந்தமிருகத்தின் மாமிசத்தையும் ஒருவரும் விற்கவோ அல்லது விற்பதற்காக வெளிக்காட்டவோ கூடாது.

### காணியும் சொத்தும்

35. அம்பலம், மடம், திறந்த வெளி அல்லது பொதுஜனங்கள் இளைப்பாறும் இடம் எதையும் ஒருவரும் அழிக்கவோ, பழுதாக்கவோ அல்லது அதன் உபயோகத்தில் தலையிடவோ கூடாது.

36. சபைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது சபையின் ஆதிக்கத்திலுள்ள பாழ் அல்லது பொது நிலம் எதையும் ஒருவரும் அழிக்கவோ, பழுதாக்கவோ அல்லது அத்துமீறவோ கூடாது.

37. ஏதும் ஒரு குறித்த கிராமத்தின் உபயோகத்துக்காகச் சபையால் பொது மேச்சல் நிலங்கள் எதுவும்பிரத்தியேகமாக விடப்பட்டிருக்கும் இடத்து, அக்கிராமம் எதிலும் வசிக்காத ஒருவரும் தலைவரின் எழுத்துமூலமான அனுமதியின்றி அந்த நிலங்களில் மாடுகள் எவையாவது மேய்க்கப்படவிடவோ அல்லது மாடுகள் எதையும் அலைந்து திரிய விடவோ கூடாது.

38. ஒரு பொது மேச்சல் நிலமாகப் பிரத்தியேகமாக விடப்பட்டிருக்கும் எக்காணியிலுள்ள வேலி எதையும் ஒருவரும் பழுதாக்கவோ அல்லது வாயில் எதையும் தடுக்கவோ அல்லது குளம் எதையும் அழுக்காகவோ அல்லது அதில் நஞ்சிடவோ கூடாது.

### முறைகெட்ட நடத்தை

39. ஒரு வெளிச்சமில்லாமலும் சட்ட முறையான காரணமில்லாமலும் ஒருவரும் இரவு 9 மணிக்குப்பின்னர் பொதுத் தெரு அல்லது பாதை எதிலும் அல்லது பெருவழி அல்லது பொது இடம் எதிலும் சோம்பித்திரியவோ அல்லது பதுங்கியிருக்கவோ கூடாது. வெளிச்சம் போடாமல் ஒரு மின்சரா விளக்கை அல்லது வேறு வெளிச்ச சாதனத்தைச் சும்மா வைத்திருத்தல் இவ்வுபவிதியின் நோக்கத்துக்குப் போதுமானதாகக் கருதப்படமாட்டாது.

40. பொதுத் தெரு அல்லது பாதை எதிலும் அல்லது பெருவழி அல்லது பொது இடம் எதிலும் ஒருவரும் குடிவெறியில் தன்னைத் தானே கவனித்துக்கொள்ளும் திறமையின்றி, அல்லது முறைகேடான விதத்தில் நடந்துகொள்ளக் காணப்படலாகாது.

41. ஒருவரும் ஏதும் அசப்பியமான எழுத்தைப் பிரசித்தப்படுத்தி அல்லது ஏதும் அசப்பியான படத்தை வரைந்து அல்லது அசப்பியான பாட்டு அல்லது கீதம் எதையும் பாடி அல்லது படித்து வேறும் எவருக்கும் ஏதும் இடைஞ்சல் உண்டுபண்ணல்லாகாது அல்லது பொதுஜன ஒழுக்கமுறைக்கு பங்கமுண்டுபண்ணக் கூடிய வேறு காரியம் எதையும் செய்யலாகாது.

42. வேறு எவராவது ஒருவரின் வீட்டின் மீது அல்லது வளவுக்குள் கற்களை அல்லது ஊத்தையை ஒருவரும் வீசலாகாது.

43. தலைவரிடமிருந்து பெற்ற ஒரு அனுமதியை அனுசரித்து அந்த அனுமதியில் சொல்லப்படும் நேரத்திலும் கால எல்லைகளுக்குள்ளுமன்றி ஒருவரும் கிராமப்பகுதிக்குள் உள்ள எந்தப்பொதுத் தெருவிலாவது அல்லது பாதையிலாவது ஏதும் சபைக்கு அல்லது ஜனத்திரளுக்கு போதனை செய்யவோ அல்லது பிரசங்கம் செய்யவோ அல்லது ஏதும் கூட்டம் நடத்தவோ கூடாது.

சூதாட்டம்

44. (அ) கிராமப்பகுதிக்குள் ஒருவரும் தாயக்கட்டைகள் அல்லது சீட்டுகள் வைத்துச் சூதாடவோ பந்தயத்துக்கு ஏதும் ஆட்டம் ஆடவோ அல்லது எந்தவிதமான பந்தயத்திலும் பங்குபற்றவோ கூடாது.

(ஆ) ஒருவரும் தாமிருக்கும் அல்லது தமக்குச் சொந்தமான அல்லது தமது அதிகாரத்தின் கீழ் உள்ள வீடு, தலம், படகு மரக்கலம் அல்லது வாகனம் எதிலும்தாயக்கட்டைகள் அல்லது சீட்டுகள் வைத்துச் சூதாடவாவது அல்லது பந்தயத்துக்கு ஏதும் ஆட்டம் ஆடவாவது விடக் கூடாது.

பகிரங்க அறிவித்தல்கள்

45. சபையின் கட்டளையினால் ஒட்டப்பட்டிருக்கும் எந்த அறிவித்தலையும் ஒருவரும் கெடுக்கவோ அல்லது அழிக்கவோ கூடாது.

46. எந்த அறிவித்தலும் சொல்லப்படும் கட்டளைகளை எவரும் வேண்டுமென்று மீறவோ அல்லது சபையின் எந்த உபவிதியின்படியும் ஆரம்பமான எந்தவேலையையும் செய்கையில் அக்கிராசனரின் அதிகாரத்தைக் கொண்டு போடப்பட்ட விளம்பரப்பலகை, வேலி, கம்பம், தடை அல்லது வேறு பொருள் எதையும் அப்புறப்படுத்தவோ கூடாது.

மலகூடங்கள் கட்டுதல்

47. (1) அதற்குள் மனிதவாசத்திற்குப் பாவிக்கப்படும் எந்த வளவினதும் சொந்தக்காரனை அல்லது குத்தகைக்காரனை ஒரு மலகூடத்தைக் கட்டிப்பரிபாலிக்கும்படி கேட்கவேண்டுமென்று சபை ஒரு பகுதியை வரையறுக்குமிடத்து, தலைவர் எழுத்துமூலமான அறிவித்தலால் சபை தீர்மானித்த அதே மாதிரியானதும் அதே அளவானதுமான ஒரு மலகூடத்தை அந்த வளவில் சபை தீர்மானித்த அதே நிலையத்தில் அத்தகைய இணைப்புக் கான்களுடன் கட்டும்படி அத்தகையை எக்காணியினதும் சொந்தக்காரனை அல்லது குத்தகைக்காரனை கேட்பதுடன் அத்தகைய தேவைகளனைத்தையும் அந்த அறிவித்தலில் குறிக்கலாம்.

(2) இந்த உபவிதியின் (1) ம் பந்தியின் கீழ் ஒரு அறிவித்தல் கொடுக்கப்பெற்ற வளவுச் சொந்தக்காரன் அல்லது குத்தகைக்காரன் ஒவ்வொருவனும் அத்தகைய எந்த அறிவித்தலும் கொடுக்கப்பெற்ற முப்பத்தொரு நாட்களுக்குள் அந்த அறிவித்தலில் சொல்லப்பட்ட தேவைகளுக்கு சகல வகையினும் இணக்கமாக ஒரு மலகூடத்தைக் கட்டுதல் வேண்டும்.

48. தலைவரின் அனுமதியுடனன்றி ஒருவரும் வீட்டுத்தேவைகளுக்குத் தண்ணீர் உதவும் எந்தக் கிணற்றிலிருந்தும் ஐம்பது அடி விட்டார்த் தத்துக்குள் ஒரு குழிக் கக்கூசைக் கட்டவோ அல்லது பரிபாலிக்கவோ கூடாது.

கட்டிடங்கள் அமைத்தல்

49. (1) கிராமப் பகுதிக்குள் ஒருவரும் புதிய கட்டிடம், எல்லைச் சுவர் அல்லது வாயில் முகப்பு எதையும்—

(அ) கிராம கரத்தைப் பாதை எதனதும் மத்தியிலிருந்து 15 அடி தூரத்துக்குள்ளாவது,

(ஆ) கால கெதியில் ஒரு கிராம கரத்தைப்பாதையாய் மாற்றப்படவிருக்கும் ஒரு பாதையென்று சபையால் அறிவிக்கப்பட்டிருக்கும் கிராமப் பாதை எதனதும் மத்தியிலிருந்து 15 அடி தூரத்துக் குள்ளாவது. அல்லது,

(இ) (ஆ) பந்தியில் சொல்லப்பட்ட ஒரு பாதையல்லாத கிராமப்பாதை எதனதும் மத்தியிலிருந்து 7 அடி தூரத்துக்குள்ளாவது கட்டலாகாது.

(2) அதைப்பற்றி அக்கிராசனருக்கு முன்னதாக 30 நாள் அறிவித்தல் கொடுக்காமல் ஒருவரும் (1) ம் பந்தியில் சொல்லப்படும் தெரு அல்லது பாதை எதனதும் ஓரமாக கட்டிடம், எல்லைச்சுவர் அல்லது வாயில் முகப்பு எதையும் நிர்மாணிக்கலாகாது.

50. இத்துணைவிதிகளில்

"தலைவர்" என்பது சபைத்தலைவர் எனப் பொருள்படும்.

"சபை" என்பது சின்னச்செட்டிகுளம் மேற்கு கிராமப்பிரதேசத்துக் கிராமச்சபை எனப்பொருள்படும்.

"கிராமப் பிரதேசம்" என்பது வவுனியாமாவட்டத்து சின்னச்செட்டிகுளம் மேற்கு கிராமப் பிரதேசம் எனப் பொருள்படும்.

அட்டவணை

பாற்பட்டி உத்தரவுப் பத்திரத்துக்கான கட்டணங்கள்

பொதுஜனங்களுக்கு பால் கொடுத்தற்பொருட்டு ஒரு பாற்பட்டி வைப்பதற்கான உத்தரவுப் பத்திரம்—

| | ரூ. | ச. |
|---|---|---|
| (அ) பசுக்களின் தொகை 3க்கு அதிகப்படாமல் இருக்குமிடத்து .. .. | 2 | 0 |
| (ஆ) பசுக்களின் தொகை 3க்கு அதிகமாக ஆனால் 10க்கு அதிகப்படாமல் இருக்குமிடத்து .. .. | 5 | 0 |
| (இ) பசுக்களின் தொகை 10 க்கு அதிகமாக இருக்குமிடத்து .. .. | 10 | 0 |

6-802—16.6.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,700

---

## பொல்காவெல பட்டின சபை

பட்டின சபைக் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைக் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின் கீழும், 152 ஆம் பிரிவின் கீழும், பொல்காவெல பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 152 ஆம் பிரிவின் கீழ் உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

நிரந்தரக் காரியதரிசி,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு, 1966 ம் ஆண்டு மே மீ 29 ந் உ.

துணைவிதி

பட்டின சபைக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 256) 129 (ஆ) பிரிவின் கீழ் விதிக்கப்பட்டதும், 1965 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆம் திகதி உள்ள அறிவித்தலில் குறிக்கப்பட்டதும், 1965 ஆம் ஆண்டு, திசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்பட்ட, 14,581 ஆம் இலக்கமுள்ள கசெற்றில் பிரசுரிக்கப்பட்டதுமான 1966 ம் ஆண்டுக்கான விசேஷ மலசலகூட வேலைவரியினின்றும் பொல்காவெல பட்டின சபையின் நிர்வாக எல்லைக்குள் இருக்கும் ஒவ்வொரு நெல்வயலும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

6-806—16.6.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,700

---

# நானாவிதம்

## ஊன்விலைஞர் பற்றிய சட்ட அறிவித்தல்

ஊன்விலைஞர் பற்றிய சட்டம் (அத்தியாயம் 272) 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க் காணப்படும் அட்டவணையில் காண்பவரிடமிருந்து 1.6.66 தொடக்கம் 31.12.66 வரை ஊன்விலைஞர் கடைக்கு லைசென்ஸ் தரும்படி விண்ணப்பம் கிடைக்கப்பட்டிருக்கிறது.

மன்னார் பட்டின சபையின பரிபாலன இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் லைசென்ஸ் கொடுப்பதை மறுக்க விரும்பினால் மறுப்பதற்கான காரணங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் (கெசெற்) பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினாலு (14) நாட்களுக்கிடையில் இணைப்பிரதிகளாக எமக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அட்டவணை

| விண்ணப்பக்காரரின் பெயரும், விலாசமும் | வியாபாரம் செய்யும் இடம் |
|---|---|
| திரு. எம். ஜெலிது, முஸ்லீம் வீதி, மன்னார் | மாட்டிறைச்சிக் கடை இல. 2, பொதுச் சந்தை நிலையம், மன்னார் |

எம். எஸ். ஏ. றகீம்,
தலைவர்.

பட்டின சபைக் காரியாலயம், மன்னார்,
1966 ம் ஆண்டு மே மீ 31 ந் உ.

6-831—16.6.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,700

## நாணுட்டான் கிழக்கு கிராமச் சபை

### ஊன்விலைஞர் பற்றிய சட்ட அறிவித்தல்

ஊன்விலைஞர் பற்றிய சட்டம் (அத்தியாயம் 272) 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க் காணப்படும் அட்டவணையில் காண்பவரிட மிருந்து 1966 ம் ஆண்டுக்கு ஊன்விலைஞர் கடைக்கு லைசென்ஸ் தரும்படி விண்ணப்பம் கிடைக்கப்பட்டிருக்கிறது.

நாணுட்டான் கிழக்கு கிராமச் சபையின் பரிபாலன இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் லைசென்ஸ் கொடுப்பதை மறுக்க விரும்பினுல் மறுப்பதற்கான காரணங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் (கெசெற்) பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினுலு (14) நாட்களுக் கிடையில் இணைப்பிரதிகளாக எமக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அட்டவணை

| விண்ணப்பகாரரின் பெயரும் விலாசமும் | வியாபாரம் செய்யும் இடம் |
|---|---|
| (1) கே. எஸ். எல். பெரேரா, முருங்கன் | ஆட்டிறைச்சிக் கடை, முருங்கன் பகிரங்கச் சந்தை |
| (2) கே. எஸ். எல். பெரேரா, முருங்கன் | மாட்டிறைச்சிக் கடை, முருங்கன் பகிரங்கச் சந்தை |

சு. மொ. சுவாந்து,
தலைவர்.

கிராமச் சபை காரியாலயம்,
நாணுட்டான் கிழக்கு, முருங்கன்,
1966 ம் ஆண்டு மே மீ 22 ந் வ.

6-838—16.6.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,700

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரயவிகிதங்கள்

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

**1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

**2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.**

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

**5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன்** அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

**8. வியாபார விளம்பரங்களும்**, பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

**9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறெக்ராறல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.**

**10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :**

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 15 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி ... ... | 15 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... | 165 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... | 330 | 0 |

**ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.**

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

**12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதி**யிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.7.66 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| **அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு)** | **உள்ளூர்** ரூ. ச. | **வெளியூர்** ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 36.00 | 49.00 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 26.00 | 31.50 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் ... ... ... | 33.50 | 41.50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | **விலை** சதம் | **தபாற் செலவு (உள்ளூர்)** சதம் |
|---|---|---|
| (அ) (i) **வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள்** ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 40 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப்பின் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 80 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 20 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 40 | 15 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற்பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1966**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **மாச்சு** .. | 4. 3.66 | வெள்ளி .. | 25. 2.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 11. 3.66 | வெள்ளி .. | 4. 3.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 18. 3.66 | வெள்ளி .. | 11. 3.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 25. 3.66 | வெள்ளி .. | 17. 3.66 | வியாழன் பி.ப. | 3.30 |
| **ஏப்பிறல்** .. | 1. 4.66 | வெள்ளி .. | 25. 3.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 7. 4.66 | வியாழன் .. | 31. 3.66 | வியாழன் பி.ப. | 3.30 |
| | 15. 4.66 | வெள்ளி .. | 1. 4.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 22. 4.66 | வெள்ளி .. | 15. 4.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 29. 4.66 | வெள்ளி .. | 22. 4.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| **மே** .. | 6. 5.66 | வெள்ளி .. | 26. 4.66 | செவ்வாய் நண்பகல் | 12 |
| | 13. 5.66 | வெள்ளி .. | 6. 5.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 20. 5.66 | வெள்ளி .. | 13. 5.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 27. 5.66 | வெள்ளி .. | 20. 5.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| **யூன்** .. | 3. 6.66 | வெள்ளி .. | 25. 5.66 | புதன் நண்பகல் | 12 |
| | 9. 6.66 | வியாழன் .. | 1. 6.66 | புதன் நண்பகல் | 12 |
| | 16. 6.66 | வியாழன் .. | 9. 6.66 | வியாழன் நண்பகல் | 12 |
| | 24. 6.66 | வெள்ளி .. | 16. 6.66 | வியாழன் நண்பகல் | 12 |
| **யூலை** | 1. 7.66 | வெள்ளி .. | 24. 6.66 | வெள்ளி நண்பகல் | 12 |
| | 8. 7.66 | வெள்ளி .. | 1. 7.66 | வெள்ளி நண்பகல் | 12 |
| | 15. 7.66 | வெள்ளி .. | 8. 7.66 | வெள்ளி நண்பகல் | 12 |
| | 22. 7.66 | வெள்ளி .. | 14. 7.66 | வியாழன் பி.ப. | 3.30 |
| | 29. 7.66 | வெள்ளி .. | 22. 7.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| **ஓகத்து** .. | 5. 8.66 | வெள்ளி .. | 29. 7.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 12. 8.66 | வெள்ளி .. | 5. 8.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 19. 8.66 | வெள்ளி .. | 12. 8.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 26. 8.66 | வெள்ளி .. | 19. 8.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| **செத்தெம்பர்** .. | 2. 9.66 | வெள்ளி .. | 26. 8.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 9. 9.66 | வெள்ளி .. | 2. 9.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 16. 9.66 | வெள்ளி .. | 9. 9.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 23. 9.66 | வெள்ளி .. | 16. 9.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 30. 9.66 | வெள்ளி .. | 23. 9.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| **ஒற்ரோபர்** .. | 7.10.66 | வெள்ளி .. | 30. 9.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 14.10.66 | வெள்ளி .. | 7.10.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 20.10.66 | வியாழன் .. | 14.10.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 27.10.66 | வியாழன் .. | 20.10.66 | வியாழன் நண்பகல் | 12 |
| **நவெம்பர்** | 3.11.66 | வியாழன் .. | 27.10.66 | வியாழன் நண்பகல் | 12 |
| | 10.11.66 | வியாழன் .. | 3.11.66 | வியாழன் நண்பகல் | 12 |
| | 18.11.66 | வெள்ளி .. | 10.11.66 | வியாழன் நண்பகல் | 12 |
| | 25.11.66 | வெள்ளி .. | 18.11.66 | வெள்ளி நண்பகல் | 12 |
| **திசெம்பர்** .. | 2.12.66 | வெள்ளி .. | 24.11.66 | வியாழன் பி.ப. | 3.30 |
| | 9.12.66 | வெள்ளி .. | 2.12.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 16.12.66 | வெள்ளி .. | 8.12.66 | வியாழன் பி.ப. | 3.30 |
| | 23.12.66 | வெள்ளி .. | 16.12.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 30.12.66 | வெள்ளி .. | 22.12.66 | வியாழன் பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1966 ம் ஆடு பெப்புருவரி மீ 11 ந் உ.

**பேர்னுட் த சில்வா,**
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை வானொலிசேவை எனவோண பேபா மிலனை கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.